# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு II

பகுதி 1

**Kerala Reader - Tamil**
**Standard II**
**Part - 1**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன், அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 2

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

மக்களின் வாழ்க்கை முறைகளும் வாழ்க்கைச் சூழல்களும் காலந்தோறும் மாறும் தன்மையன. அறிவியலின், தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சி உலகையே புரட்டிப் போட்டுவிட்டது என்று சொல்லலாம். எல்லா நிலைகளிலும் மாற்றங்கள். கற்றல் – கற்பித்தல் அணுகுமுறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.கற்றல் என்பது கிடைக்கின்ற அறிவையெல்லாம் சேகரித்து வைப்பது அல்ல. கற்ற கல்வி தனக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும். பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. சூழல்களையும் சவால்களையும் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு தக்கபடியான பாடங்களைத் தேர்ந்தெடுப்பதும் ஒரு சவால்தான். தேர்ந்தெடுத்த பாடங்களை வகுப்பிற்குத் தகுந்தவாறு அறிமுகம் செய்வதிலும் மிகுந்த கவனம் தேவைப்படுகிறது.

ஆரம்ப வகுப்புகளைப் பொறுத்த வரையில் படங்களுக்கும் பாடங்களைப் போலவே முக்கிய பங்கு உண்டு. பாடம் பாதி, படம் பாதி! கற்பித்தல் என்பது ஒரு பக்கத்திலிருந்து நிகழ வேண்டிய ஒன்றல்ல. கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நிகழும் ஒரு கலந்துரையாடலைத் தான் இப்போது கற்றல் என்கிறோம். கற்போரின் மூளைக்குள் அறிவைத் திணித்தல் என்பதற்கு மாறாக அவர்கள் தாமாக சிந்தித்து அறிவை வளர்த்துக் கொள்வதற்கான துண்டுகோலாகவும் கற்றல் முறை அமைய வேண்டும்.

இரண்டாம் வகுப்பு என்பதால் மொழி, கணிதம், சுற்றுச்சூழல் கல்வி மூன்றையும் ஒருங்கிணைத்து வழங்க வேண்டிய ஒரு கட்டாயமும் உள்ளது. பாடங்களைப் பரிமாற்றம் செய்வதில் ஆசிரியர்கள் மிகுந்த கவனம் செலுத்தியாக வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

படியுங்கள்! பயன்பெறுங்கள்.

**முனைவர் ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - II (Part 1)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Srinivasan, S.P.**
Associate Professor of Tamil, University College, Thiruvananthapuram.

### Expert

**Dr. Simla Star, D.V.**
Associate Prof. Arignar Anna College Aralvaimoli, K.K Dist.

### Members

**Babu, S.**, Rtd. HM, GLPS Devikulam, Munnar, Idukki.

**Francis Mary, M.**, LPST, ALPS Arivikad, Munnar, Idukki.

**Heleena, K.**, LPST, GHS Vanchivayal, Idukki.

**Johny Mon, R.R.**, LPST. LMS Tamil HS, Parasala, Thiruvananthapruam.

**Ragupathi, M.**, HM, GTLPS, Champakad, Munnar, Idukki.

**Russelraj, R.**, Rtd. HM, ALPS Pullivasal, Munnar, Idukki.

**Selvakumar, R.**, Rtd. HM, ALPS, Periavurai, Munnar, Idukki.

### Academic Co - Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 1 | இயற்கை இன்பம் | |
| | பொழிலும் அழகும் | 7 – 14 |
| | வானம்பாடி | 15 – 21 |
| | எங்கள் உலகம் | 22 – 28 |
| அலகு 2 | அன்பின் சிகரம் | |
| | பாசப் பறவைகள் | 29 – 34 |
| | உயிர்களின் உலகம் | 35 – 41 |
| | வெளிச்சம் | 42 – 48 |
| அலகு 3 | உழைப்பும் உயர்வும் | |
| | கனவு இல்லம் | 49 – 56 |
| | எங்கள் வீட்டுப் பிள்ளைகள் | 57 – 63 |
| | பேசும் மீன்கள் | 64 – 70 |
| அலகு 4 | உடலும் உள்ளமும் | |
| | உணவே மருந்து | 71 – 81 |
| | ஆள்பாதி ஆடைபாதி | 82 – 87 |
| | வாழ்வும் விளையாட்டும் | 88 – 94 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# இயற்கை இன்பம்

## பொழிலும் அழகும்

*தமிழரசி வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள். வீட்டுத் தோட்டத்திலுள்ள மரங்களில் விலங்குகளும் பறவைகளும் வந்து அமர்ந்தன. அவள் அவற்றை வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினாள். அங்கே குரங்கு ஒன்று பழங்கள் பறித்துத் தின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் தமிழரசி பாடத் தொடங்கினாள்.*





## குரங்குத் தாத்தா

குரங்குத் தாத்தா குரங்குத் தாத்தா
இங்கே வாங்களேன்.
கொய்யா மரத்தில் பழம் இருக்குது
பறித்துத் தாங்களேன்.

குரங்குப் பாட்டி குரங்குப் பாட்டி
இங்கே வாங்களேன்.
தென்னை மரத்தில் காய் இருக்குது
பறித்துத் தாங்களேன்.

அணில் அண்ணா அணில் அண்ணா
இங்கே வாங்களேன்.
மாமரத்தில் பழம் இருக்குது
பறித்துத் தாங்களேன்.

தவளைத் தம்பி தவளைத் தம்பி
தத்தி வாங்களேன்.
தாமரைப் பூ குளத்தில் இருக்குது
பறித்துத் தாங்களேன்.

காக்கை மாமி காக்கை மாமி
கரைந்து வாங்களேன்.
கோவைக் கொடியில் பழம் இருக்குது
பறித்துத் தாங்களேன்.

நரி மாமா நரி மாமா
நடந்து வாங்களேன்.
நாவல் மரத்தில் பழம் இருக்குது
பறித்துத் தாங்களேன்.

குயில் அக்கா குயில் அக்கா
கூவி வாங்களேன்.
குக்குக் கூவெனக் குரலில் பாட்டுச்
சொல்லித் தாங்களேன்.

மயில் அண்ணா மயில் அண்ணா
ஆடி வாங்களேன்.
மயில் நடனம் நானும் ஆடச்
சொல்லித் தாங்களேன்.



## செயல்பாடுகள்

- ❖ பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- ❖ தமிழரசியின் வீட்டுத் தோட்டத்திலுள்ள உயிரினங்களைப் பாருங்கள். பெயர் எழுதுங்கள்.















- ❖ தமிழரசி வேறு எந்தெந்த உயிரினங்களிடம் என்னென்ன கேட்டிருப்பாள்? பாடல் வரிகளைக் குறிப்புகளின் அடிப்படையில் முழுமைப்படுத்துங்கள்.

சேவல் அண்ணா சேவல் அண்ணா

இங்கே வாங்களேன்

..............................................................

..............................................................

..............................................................

..............................................................

..............................................................

..............................................................

◆ சேவல் – கூவும் ◆ கொக்கு – மீன்

தமிழரசிக்கு இரவு நேரம் தூக்கம் வந்தது. வழக்கம் போல் பாட்டியிடம் சென்றாள். பாட்டி சொல்லும் கதை கேட்ட பின்பே தூங்குவாள். அது பாட்டிக்கு நன்றாகத் தெரியும். "இன்று உனக்கு என்ன கதை வேண்டும்?" பாட்டி கேட்டாள். ஏதேனும் விலங்குகள் பற்றிக் கதை சொல்லுங்களேன் பாட்டி" என்றாள் தமிழரசி. பாட்டி கதை சொல்லத் தொடங்கினாள்.



## ஆணவ ஒட்டகம்

விலங்குகள் கூட்டத்தில் திமிர் பிடித்த ஒட்டகம் ஒன்று இருந்தது. தினமும் ஏதாவது ஒரு விலங்கைப் பற்றிக் கிண்டல் செய்யாவிடில் அதற்குப் பொழுது போகாது.

ஒரு நாள் அந்த ஒட்டகம் தன் எதிரே வந்த பசுவிடம் "உன் உடம்பு பெருத்தும், உடம்பு முழுவதும் சாணம் திட்டுத் திட்டாக ஒட்டியும் அசிங்கமாய் தெரிகின்றாய்" என மற்ற விலங்குகளும் கேட்குமாறு கொட்டமடித்தது.

மறுநாள் எருமை ஒன்றிடம் "நீயும் உன் நிறமும்! கொம்பு இரண்டும் வளைந்து எவ்வளவு அசிங்கமாய் இருக்கிறாய்" என்றது. ஒரு



விலங்கைக்கூட ஒட்டகம் விட்டு வைக்கவில்லை.

எல்லா விலங்குகளும் ஒட்டகத்தின் தினசரிக் கிண்டலைக் கேட்டு வருத்தப்பட்டுக் கொண்டிருந்தன. அச்சமயம் அங்கு வந்த நரி ஒன்று, "யார் அங்கே, ஒட்டடைக் குச்சி கால்களும், அசிங்கமான கூனல் முதுகும், காவி நிறப் பற்களுடனும் இருப்பது!" இப்படி ஓர் அசிங்கமான விலங்கை என் வாழ்நாளில் பார்த்ததேயில்லை" என ஒட்டகத்திற்குக் கேட்குமாறு நகைத்துக் கூறியது.

அதைக் கேட்ட ஒட்டகம் தலைகுனிந்து பாலைவனத்தை நோக்கி ஓடி மறைந்தது.



## செயல்பாடுகள்

❖ கதையில் எத்தனை விலங்குகளின் பெயர்கள் வந்துள்ளன? அவற்றின் பெயர்களை எழுதுங்கள்.

❖ காட்டில் வாழும் விலங்குகளின் பெயர்களையும் வீட்டில் வளர்க்கும் விலங்குகளின் பெயர்களையும் அட்டவணையில் எழுதுங்கள்.

| காட்டில் வாழ்பவை | வீட்டில் வளர்ப்பவை |
|---|---|
| ◈ | ◈ |
| ◈ | ◈ |
| ◈ | ◈ |
| ◈ | ◈ |

❖ கதையிலுள்ள கதாபாத்திரங்களாக மாறி நடியுங்கள்.

◈ விலங்குகளின் உணவு முறைகளைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுங்கள்.

◈ உண்ணும் உணவின் அடிப்படையில் விலங்குகளை வகைப்படுத்துங்கள்.

| தாவரத்தை மட்டும் உண்பவை | மாமிசத்தை மட்டும் உண்பவை | தாவரத்தையும் மாமிசத்தையும் உண்பவை |
|---|---|---|
| ◈ | ◈ | ◈ |
| ◈ | ◈ | ◈ |
| ◈ | ◈ | ◈ |
| ◈ | ◈ | ◈ |

# வானம்பாடி

*பள்ளியிலிருந்து திரும்பிய தமிழரசி விளையாட்டுப் போட்டியில் தான் பெற்ற பரிசைப் பாட்டியிடமும் வீட்டிலுள்ளவர்களிடமும் காட்டினாள். அனைவரும் அவளைப் பாராட்டினர். அப்போது யாரோ அவளை அழைப்பது போல் தோன்றியது. வெளியே ஓடினாள். அதோ மரத்தில் அழகிய ஒரு கிளி! அவள் கிளியுடன் பேச ஆரம்பித்தாள்.*



# மூக்கழகி

குழந்தை : கிளியே! கிளியே! வா வா வா!
கொஞ்சிப் பேச பறந்து வா!
உளி போல் மூக்கால் கொத்த வா!
ஊரில் கூடி ஆட வா!

கிளி : பாப்பா! பாப்பா! வரமாட்டேன்!
பழங்கள் தேடி நான் போவேன்!
சாப்பாடு உனக்குத் தந்திடவே
அம்மா உள்ளாள், எனக்கிலையே!





குழந்தை : என்னையும் அழைத்துப் போவாயே!
எங்கும் வருவேன் உன் வழியே!
பின்னர் மாலைப் பொழுதினிலே
பொழுதைக் கழிப்போம் இங்கேயே!

கிளி : உன்னையும் அழைத்துச் சென்றாலோ
ஊரில் தேடுவார் உன்னம்மா!
என்னைக் கூண்டில் அடைத்திடுவார்!
சிவந்த மூக்கை உடைத்திடுவார்!

குழந்தை : கிளியே! கிளியே! வரவேண்டாம்!
கூண்டில் துடித்தே விழவேண்டாம்!
தெளிவாய் நானும் சொல்கின்றேன்!
துன்பக் கூண்டில் பட வேண்டாம்!





## செயல்பாடுகள்

❖ உரையாடல் பாடலை இருவர் இருவராகச் சேர்ந்து பாடுங்கள்.

❖ மாதிரியைப் போன்று வளரும் தொடர்களை உருவாக்குங்கள்.

**மாதிரி :**



மயில் ஒரு பறவை.
மயில் ஓர் அழகான பறவை.
மயில் நடனம் ஆடும் ஓர் அழகான பறவை.
மயில் தோகை விரித்து நடனம் ஆடும் ஓர் அழகான பறவை.



......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................
......................................................................................................................

❖ பறவைகளைக் காட்டில் வாழ்பவை, வீட்டில் வளர்ப்பவை என்பதன் அடிப்படையில் அட்டவணைப்படுத்துங்கள்.

| காட்டில் வாழ்பவை | வீட்டில் வளர்ப்பவை |
|---|---|
| ◈ ........................................ | ◈ ........................................ |
| ◈ ........................................ | ◈ ........................................ |
| ◈ ........................................ | ◈ ........................................ |

## கறுப்பழகி

*தமிழரசி தன் பாட்டியிடம் ஓடினாள். "பாட்டி... பாட்டி... பறவைகள் எவ்வளவு அழகாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்கின்றன. எனக்கும் பறவைகளைப் போல் பறந்து செல்ல வேண்டும்" என்றாள். அப்படியா? என்று கேட்டுக் கொண்டே அவளிடம் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொடுத்தாள் பாட்டி. தமிழரசி புத்தகத்தை வாங்கிப் படிக்க ஆரம்பித்தாள்.*



அன்னப்பறவையே!
வெள்ளை வண்ணத்தில்
எவ்வளவு அழகாக
இருக்கிறாய்! பறவைகளிலே
நீ தான் அழகான பறவை! சரிதானே?

நான் வெண்ணிறமாக உள்ளேன்.
கிளியோ பச்சை வண்ணமும் வாய்
செந்நிறமும் கொண்டு அழகாக உள்ளது.
என்னை விட அழகான பறவை கிளிதான்.





"கிளியே! இரண்டு வண்ணங்களில்
அழகாகக் காட்சி அளிக்கிறாய் உன்னைப்
போன்ற அழகான பறவையை நான்
பார்த்தது இல்லை. நீ தான் மகிழ்ச்சியான
பறவை என்று நினைக்கிறேன்.

காக்கையே! என் உடலில் இரண்டு
வண்ணங்கள் தான் உள்ளன. மயிலின்
தோகையில் எல்லா வண்ணங்களும்
உள்ளன. அதைப் போன்ற அழகான
பறவை இல்லை.





வானவில்லின் அத்தனை
வண்ணங்களும் உன் தோகையில்
மின்னுகின்றன. உன் அழகு எந்தப்
பறவைக்கு உள்ளது? பறவைகளிலே
நீதான் அழகு. மகிழ்ச்சியான பறவை
நீ தான் என்று நினைக்கிறேன்.
சரிதானே!

" காக்கையே! நீ நினைப்பது சரியல்ல.
உலகத்திலேயே மகிழ்ச்சியான பறவை
நீ தான்"





மயிலே! அழகே இல்லாத நான்
மகிழ்ச்சியான பறவையா? என்னைப்
பார்த்துமா அப்படிச் சொல்கிறாய்?

இங்கே எல்லாப் பறவைகளும்
கூண்டில் அடைபட்டுக் கிடக்கின்றன.
நீ தானே கூண்டில் அடைபடாத
மகிழ்ச்சியான பறவை!



## செயல்பாடுகள்

❖ உனக்குப் பிடித்த பறவை எது? ஏன்?

**எனக்குப் பிடித்த பறவை**

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

❖ உனக்குப் பிடித்த பறவையின் படம் வரைந்து வண்ணம் தீட்டவும்.

## எங்கள் உலகம்

*தமிழரசி படித்த புத்தகத்தின் சில பக்கங்களில் பாடல்களும் இருந்தன. அவை சில உயிரினங்களைப் பற்றியனவாகும். தமிழரசி அவற்றில் ஒரு பாடலைப் பாடிப் பார்த்தாள். பாடிக் கொண்டே அவள் உறங்கிவிட்டாள்.*



# எளிமையான தவளையார்!

தவளையார் தவளையார்
தத்திச் செல்லும் தவளையார்!
தண்ணீருக்குள் வாழ்ந்திடும்
தங்க நிறத் தவளையார்!





குளத்தில் வாழும் தவளையார்
கொர் கொர்னு கத்துவார்!
கிணற்றில் வாழும் தவளையார்
கீச் கீச்சுன்னு கத்துவார்!

மழைக்காலம் வந்திட்டால்
மகிழ்ச்சியாலே கத்துவார்!
ஏரியிலே வாழ்ந்திடும்
எளிமையான தவளையார்!

பாம்பைக் கண்டால் பதுங்குவார்
பச்சை நிறத் தவளையார்!
பருந்தைக் கண்டால் ஒதுங்குவார்
பண்பான தவளையார்!

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- தவளை எங்கே வாழும்?
- தண்ணீரிலும் தரையிலும் வாழும் எத்தனை உயிரினங்களின் பெயர்கள் உங்களுக்குத் தெரியும்? எழுதுங்கள்.

| தண்ணீரிலும் தரையிலும் வாழும் உயிரினங்கள் | |
|---|---|
| ◈ | ◈ |
| ◈ | ◈ |
| ◈ | ◈ |
| ◈ | ◈ |

- பாடலில் உனக்குப் பிடித்த அடிகள் எவை? ஏன்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



மறுநாள் காலையில் தமிழரசி எழுந்தவுடன் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு வீட்டின் வராந்தாவுக்கு வந்தாள். மீண்டும் வாசிக்கத் தொடங்கினாள்.

# குரங்கும் டால்பினும்

ஒரு முறை சில மாலுமிகள் கப்பலில் பயணித்தனர். ஒரு மாலுமி தனது செல்லப் பிராணியான ஒரு குரங்கைத் தன்னுடன் கொண்டு வந்திருந்தார். வெகுதூரம் கடலில் சென்றபோது ஒரு பெரிய அலையால் கப்பல் கவிழ்ந்தது. கப்பலில் இருந்த அனைவரும் கடலில் விழுந்தனர். குரங்கும் கடலில் விழுந்து மூழ்கி விடும் நிலையில் இருந்தது. திடீரென்று ஒரு டால்பின் அங்குத் தோன்றி, மூழ்கிக் கொண்டிருந்த குரங்கைப் பிடித்துக் காப்பாற்றியது. டால்பினின் முதுகில் ஏறி, குரங்கு ஒரு தீவை அடைந்தது. டால்பின் குரங்கைப் பார்த்து, "உனக்கு இந்த இடம் தெரியுமா?" எனக் கேட்டது.



அதற்குக் குரங்கு "ஆமாம், தெரியும். உண்மையிலேயே இந்தத் தீவின் அரசன் என் நண்பன். அது உனக்குத் தெரியுமா?" எனத் திருப்பிக்கேட்டது. ஆனால் இந்தத் தீவானது தனிமைப் படுத்தப்பட்டது என்பதை டால்பின் நன்கு அறியும். அது குரங்கிடம்" நீயே இளவரசன். தற்போது நீ ஓர் அரசனாவாய்" என்றது. "நான் எப்படி அரசனாவேன்?" என வினவியது குரங்கு. டால்பின் கடலுக்குள் சிறிது தூரம் சென்றபின், "தற்போது இந்தத் தீவில் நீ ஒருவன் மட்டும்தான் உயிரினம். இயற்கையாகவே நீ தான் அரசன்" எனக் கூறிச் சென்று விட்டது. பொய் சொல்லியதால் வந்த விளைவை எண்ணி வருந்தியது குரங்கு.



## செயல்பாடுகள்

❖ உங்களுக்குத் தண்ணீரில் வாழும் எத்தனை உயிரினங்களின் பெயர்கள் தெரியும்?

- ........................................................................................
- ........................................................................................
- ........................................................................................
- ........................................................................................
- ........................................................................................
- ........................................................................................

❖ விடை எழுதுங்கள்.

- மாலுமியின் செல்லப் பிராணி : ......................................................
- குரங்கைக் காப்பாற்றியது : ......................................................
- கப்பலைக் கவிழ்த்தது : ......................................................

அறிந்து கொள்ள.....

மாலுமி – கப்பல் ஓட்டுபவர்

தீவு – சுற்றிலும் நீரால் சூழப்பட்ட பகுதி

அலகு 2

# அன்பின் சிகரம்

## பாசப் பறவைகள்

*எழிலன் அதிகாலையில் எழுந்திருப்பான். காலைக் கடன்களை முடித்த பின் தன் பெற்றோருக்கு உதவி செய்வான். வீட்டில் எல்லோரும் வேலைகளைப் பகிர்ந்து செய்வார்கள். எழிலனின் குடும்பம் அன்பான குடும்பம்.*



## விரல்கள்

கையில் விரல்கள் ஐந்தைப் பார்!
விரல்கள் இணைந்தால் உதவும் பார்!
வீட்டில் உள்ள அனைவருமே
விரல்கள் போல உதவிடுவார்.



அப்பா குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்.



அம்மா கணினியில் வேலை செய்கிறார்.



குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாய் அமர்ந்து உணவு உண்கிறார்கள்



பாட்டி குழந்தைக்குச் சட்டை அணிவிக்கிறார்.



அக்காள் தம்பிக்குப் படம் வரையக் கற்றுக் கொடுக்கிறார்



அண்ணன் தம்பிக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொடுக்கிறார்.

## செயல்பாடுகள்

❖ பாடப்பகுதியிலுள்ள படங்களைப் பார்த்து யார் யார் என்ன செயல்களைச் செய்கிறார்கள் என்பதை எழுதுங்கள்.

- அப்பா : ............................................................................
- அம்மா : ............................................................................
- பாட்டி : ............................................................................
- அண்ணன் : ............................................................................
- அக்காள் : ............................................................................

❖ உங்கள் வீட்டில் நீங்கள் என்னென்ன வேலைகளைச் செய்வீர்கள்? எழுதுங்கள்.

- ............................................................................
- ............................................................................
- ............................................................................
- ............................................................................
- ............................................................................

❖ வீட்டிலுள்ளவர்கள் செய்யும் வேலைகளைப் பட்டியலிட்டு கூடுதல் வேலை செய்பவர்களைக் கண்டுபிடியுங்கள்.

| அப்பா | அம்மா | அண்ணன் | அக்காள் |
|---|---|---|---|
| | | | |
| கூடுதல் வேலை செய்பவர் | | | |

## ஊரும் உறவும்



*எழிலன் தன் குடும்பத்தை நினைத்துப் பெருமை கொண்டான். தன் குடும்பத்தைப் பற்றி ஒரு பாடலைப் பாடினான்.*

அம்மா அப்பா உயிர்கொடுத்தே
அன்பாய் நாளும் வளர்த்தார்கள்!
தாத்தா பாட்டி கதை சொல்லி
தரணியில் வாழும் வகை
சொன்னார்!

அண்ணன் அக்காள் நேசமுடன்
அன்பை மழையாய்ப் பொழிவார்கள்
தம்பி தங்கை எங்களுக்குத்
தங்கக் கட்டி போலாவார்!



சித்தியின் கணவர் சித்தப்பா
சிரித்துப் போற்றிக் கவனிப்பார்!
மாமா அத்தை மகிழ்வோடு
மனங்கள் குளிர வரவேற்பார்!

உறவுகள் மேம்படப் போற்றிடுவோம்
உயர்ந்த அன்பைக் காட்டிடுவோம்!
உற்றார் உறவினர் நண்பரென்றே
ஊருடன் கூடி மகிழ்ந்திருப்போம்!

## செயல்பாடுகள்

- ❖ பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்
- ❖ பாடலில் உனக்குப் பிடித்த பகுதி எது? ஏன்?
- ❖ எத்தனை வாக்கியங்கள் எழுதலாம்?

| | | |
|---|---|---|
| அப்பா | | |
| அம்மா | சமையல் | செய்வார் |
| அண்ணன் | | |
| | கதை | சொல்வார் |
| அக்காள் | | |
| தாத்தா | பாட்டு | பாடுவார் |
| பாட்டி | | |

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................



எழிலனின் வீட்டில் அவனது செல்லப் பிராணியான நிலா என்ற நாய்க்குட்டி இருந்தது. நிலா என்றால் அவனுக்குக் கொள்ளை அன்பு. எப்போதும் அதன் பின்னாலேயே நடப்பான். அது அவனது அம்மாவிற்குப் பிடிக்கவில்லை.

# காவலாளி


எழிலா எழிலா சாப்பிட வா
அம்மா ... நிலா பால் குடிக்கிறது. குடித்த பின் வருகிறேன்
இந்த நாயைத் துரத்த வேண்டும்.
ஐயோ திருடன் காப்பாற்றுங்கள்
ஐயோ!... ஐயோ!.....
நீ தாண்டா என் செல்லக்குட்டி

## செயல்பாடுகள்

- படக் கதையைப் பார்த்துக் கதையைக் கூறுங்கள்.
- எழிலனின் அம்மாவிற்கு நாயைப் பிடிக்காதது ஏன்?
- நாய் யாரைக் கடித்தது?
- அம்மாவிற்கு நாயின் மீது அன்பு ஏற்படக் காரணம் என்ன?
- எழிலனின் நாய் பெயர் என்ன?
- மாதிரியைப் போன்று தொடர் அமைத்து எழுதுங்கள்.



- நாய் ஒரு விலங்கு
- நாய் வீட்டைக் காவல் காக்கும்
- நாய் நன்றியுள்ள விலங்கு



-
-
-



-
-
-



-
-
-



-
-
-

*எழிலன் இரவு படுக்கச் சென்றான். அவனுடைய நிலா நாய்க்குட்டியும் மற்றும் சில விலங்குகளும் அவன் கண்முன் தோன்றி மறைந்தன. கண் அயர்ந்தான். அதோ! ஒரு மான் மரத்தில் கயிற்றால் கட்டப்பட்டுள்ளது. அது கயிற்றை விடுவிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அவன் மானுடன் பேச ஆரம்பித்தான்.*



## மானின் விடுதலை

பையன் : புள்ளி மானே கோபம் நீ
கொள்வதேனோ, கூறுவாய்?

மான் : கட்டவிழ்த்து விட்டிடு
காட்டை நோக்கிப் போகிறேன்.

பையன் : ஒரு வினாடி கூட நான்
உன்னை விட்டிருப்பேனோ?

மான் : உடனே நீயும் புறப்படு
ஒன்றாய்க் காடு செல்லலாம்

பையன் : காட்டை நோக்கிப் போகவா!
கல்லும் முள்ளும் குத்துமே
அம்மா, அப்பா, பாட்டியை
ஐயோ, விட்டு வருவதா?
இருட்டில் போனால் விளக்குமே
இல்லை அந்தக் காட்டிலே
சிங்கம், கரடி, புலியுமே
சீறி வந்து கடிக்குமே!



மான் : அப்படித் தான் எனக்குமே
அதிகத் துன்பம் இல்லையோ?
சுற்றத்தார்கள் வருவரோ?
துள்ளிச் சுற்ற முடியுமோ?
ஆசை கொண்ட உணவையும்
அடைந்து தின்னக் கூடுமோ?
கழுத்து நோக எனனை யார்
காட்டில் கட்டிப் போடுவார்?

இதனைக் கேட்ட அவன் மனம்
இளகிப் போச்சு மெத்தவும்.

பையன் : " ஐயோ, பாவம் ஐயய்யோ!
அவிழ்த்து விட்டேன், ஓடிடு

என்று கூறிக் கழுத்திலே
இருந்த கட்ட விழ்த்தனன்
காட்டை நோக்கி மகிழ்வுடன்
காற்றைப் போல ஓடிடும்
மானைக் கண்டு அவனுமே
மகிழ்ச்சி கொள்ளலாயினன்!



## செயல்பாடுகள்

- உரையாடல் பாடலை இருவர் கொண்ட குழுக்களாகப் பாடி நடியுங்கள்.
- உரையாடல் பாடலில் உனக்குப் பிடித்த பகுதிகள் எவை? ஏன்? எழுதுங்கள்.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

- கீழே தரப்பட்டுள்ள வரிகள் யார் யாரிடம் கூறியது?
  - கட்டவிழ்த்து விட்டிடு
    காட்டை நோக்கிப் போகிறேன்.
  - " ஐயோ, பாவம் ஐயய்யோ!
    அவிழ்த்து விட்டேன் ஓடிடு

- பொருத்தமான எதிர்ச்சொல்லை எழுதுங்கள்.
  - மகிழ்ச்சி × ..................................................
  - இருட்டு × ..................................................
  - ஓடு × ..................................................
  - காடு × ..................................................

(நில், வெளிச்சம், நாடு, கவலை)

## வெளிச்சம்

*எழிலன் காலையில் கண் விழித்தான். இரவு கண்ட கனவை நினைத்துப் பார்த்தான். மானை விடுதலை செய்ததை எண்ணிப் பெருமை கொண்டான். உற்சாக மிகுதியால் பாடல் ஒன்றை எழுதினான்.*



## உதவிக்கரம்

அன்பாய் வாழ வேண்டும் ! – நாளும்
அறிவை வளர்க்க வேண்டும் !
அன்பும் பண்பும் வேண்டும் ! – நல்ல
ஆக்கம் விதைக்க வேண்டும்!

துன்பம் துடைக்க வேண்டும் ! – பிறர்
துயரம் போக்க வேண்டும்.
இன்பம் காண வேண்டும் ! பிறர்க்கு
என்றும் உதவ வேண்டும் !

ஒன்றி வாழ வேண்டும் ! – அதில்
உயர்வு காண வேண்டும் !
நன்றி காட்ட வேண்டும் ! தாய்
நாடு காக்க வேண்டும் !

ஒழுக்க உயர்வு வேண்டும் ! அதை
ஓம்பப் பழக வேண்டும் !
முழுக்க முயற்சி வேண்டும் ! –அதில்
முகிழ்க்கும் வெற்றி யாண்டும் !



## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலில் கவிஞர் எதையெல்லாம் செய்ய வேண்டும் என்று கூறுகிறார்? கூறுங்கள்.
- பாடலிலுள்ள ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| எ.கா : | ஒன்றி | நன்றி |
| | .............................. | .............................. |
| | .............................. | .............................. |
| | .............................. | .............................. |
| | .............................. | .............................. |
| | .............................. | .............................. |

- பொருள் எழுதுங்கள்.
  - அன்பு – ..................................
  - துன்பம் – ..................................
  - இன்பம் – ..................................
  - அறிவு – ..................................
  - பண்பு – ..................................

(வருத்தம், குணம், புத்தி, பாசம், மகிழ்ச்சி)

## தங்கக்காசு

*எழிலனின் பொன்வயல் கிராமத்தில் கடும் பஞ்சம் நிலவியது. அவ்வூர் மக்கள் பசியால் வாடினார்கள். எனவே நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரைப் பார்க்கச் சென்றார்கள்.*





ஊர் மக்கள் : ஐயா வணக்கம்!

செல்வந்தர் : வணக்கம்! வாருங்கள் எதற்காக வந்துள்ளீர்கள்?

ஊர் மக்கள் : ஐயா! மழை பெய்யாமல் எங்கள் ஊரில் கடும் பஞ்சம் நிலவுகிறது.

செல்வந்தர் : அப்படியா! நானும் கேள்விப்பட்டேன்.

ஊர் மக்கள் : ஆம் ஐயா! நாங்கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர், சிறுமியர் என்ன செய்வார்கள்? நீங்கள் தான் உதவி செய்ய வேண்டும்.

செல்வந்தர் : சரி! இந்த ஊரில் குழந்தைகள் யாரும் பசியால் வாட வேண்டாம். ஒவ்வொருவருக்கும் ஒரு ரொட்டி கிடைக்குமாறு செய்கிறேன். குழந்தைகளை வரச் சொல்லுங்கள்.

ஊர் மக்கள் : நன்றி ஐயா!

செல்வந்தர் : ஆறுமுகம் இங்கே வா

வேலையாள்: சொல்லுங்கள் ஐயா

செல்வந்தர் : இந்த ஊரிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையை எடுத்துக் கொள். ஆளுக்கொரு ரொட்டி கிடைக்க வேண்டும்.

(மறுநாள் ஆறுமுகம் ரொட்டிக் கூடையுடன் வெளியே வந்தான். காத்திருந்த சிறுவர், சிறுமியர் அவனைச் சூழ்ந்து கொண்டனர்)

வேலையாள் : ஆளுக்கொரு ரொட்டியை எடுத்துக் கொள்ளுங்கள். மீனு நீயும் எடுத்துக் கொள்.





மீனு : நான் கடைசியில் எடுத்துக் கொள்கிறேன்.

வேலையாள்: மீனு அவர்களைப் பார். தினமும் பெரிய ரொட்டித் துண்டுகளை எடுத்துக் கொள்கிறார்கள். நீ மீதியுள்ள சிறிய ரொட்டியைக் கடைசியில் எடுக்கிறாய்.

மீனு : எனக்கு இது போதும்.

அம்மா : மீனு இன்று ரொட்டி கிடைத்ததா?

மீனு : ஆம் அம்மா இந்தாருங்கள்

அம்மா : மீனு என்ன இது? ரொட்டியில் இருந்து தங்கக் காசு கீழே விழுகிறது. இதை அங்கேயே கொடுத்துவிட்டு வா.

மீனு : சரி அம்மா.

செல்வந்தர் : வா பாப்பா.

மீனு : ஐயா இந்தாருங்கள்! இது உங்கள் தங்கக் காசு. ரொட்டிக்குள் இருந்தது!

செல்வந்தர் : அப்படியா,உன்பொறுமைக்கும் நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக் காசு. இதை நீயே எடுத்துக் கொள்.

மீனு : நன்றி ஐயா! நான் இதை என் அம்மாவிடம் கொடுப்பேன்.



## செயல்பாடுகள்

- உரையாடலை நாடகமாக வகுப்பறையில் நிகழ்த்துங்கள்.

- பெயர் எழுதுங்கள்

  வகுப்பறையில் நாடகமாக நிகழ்த்தியபோது கதாபாத்திரங்களாக நடித்தவர்களின் பெயர்களை எழுதுங்கள்.

  - செல்வந்தர் – ........................................
  - மீனு – ........................................
  - வேலையாள் – ........................................
  - அம்மா – ........................................
  - ஊர்மக்கள் – ........................................

- சரியான இடம் அறிந்து பொருத்தமான சொல்லை எழுதுங்கள்.

  - ................................ நல்லவள் (அவர்கள், நீ)
  - ................................ செல்வந்தர் (அவன், அவர்)
  - ................................ வந்தீர்களா? (நீங்கள், நாங்கள்)
  - ................................ சிறுவர்கள் (அவன், அவர்கள்)
  - ................................ சென்றார் (அவன், அவர்)
  - ................................ தங்கக்காசு (நீ, உங்கள்)

அலகு 3

# உழைப்பும் உயர்வும்

## கனவு இல்லம்

*நிலனும் வளனும் நண்பர்கள். ஒரு நாள் அவர்கள் வீடு கட்டும் இடத்தில் சென்று பார்வையிட்டனர். எத்தனை எத்தனை வேலையாட்கள்! அவர்கள் இருவரும் வீடு கட்டிக் கொண்டிருக்கும் கொத்தனாரைக் கண்டனர். வீடுகட்டுவதைப் பற்றி கொத்தனாரிடம் கேட்டனர்.*



# கட்டடம் கட்டிடுவோம்



ஓட்டு வீடு மாடி வீடு
ஒழுங்காய்க் கட்டும் கொத்தனார்!
நாட்டுப்புறத்தும் நகர்ப்புறத்தும்
நன்றாய்க் கட்டும் கொத்தனார்!







அடுக்கு மாடி வீடு, பள்ளி
அனைத்தும் கட்டும் கொத்தனார்!
நெடுமதில்கள் உயர்ந்து நிற்க
நீளக் கட்டும் கொத்தனார்!

குளங்கள் கோவில் கோபுரங்கள்
கிணறும் கட்டும் கொத்தனார்!
நலமாய்க் கட்டடங்கள் யாவும்
நன்றே கட்டும் கொத்தனார்!





## செயல்பாடு

❖ பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.

❖ பாடலில் கொத்தனார் கட்டுவதாகக் கூறப்படும் கட்டுமானங்கள் எவை?

❖ உங்களுக்கு எத்தனை வகையான வீடுகளைத் தெரியும்?

❖ வீடு கட்டுவதில் ஈடுபடும் தொழிலாளர்கள் யார் யார்?

❖ உனது வீட்டைப் பற்றி ஒரு சிறுகுறிப்பு எழுதுக.

**எனது வீடு**

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................



ஒரு விடுமுறை நாளில் நிலனும் வளனும் புளிய மரத்தின் அடியில் பம்பரம் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த மரத்தின் கிளை ஒன்றில் இருந்து காகம் கரைவதைக் கேட்டு அண்ணாந்து பார்த்தனர். காக்கை அதன் கூட்டில் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டியது.

# யார் வீடு பெரியது?




எதிரில் ஒரு நத்தையும் ஆமையும் வந்து சேர்ந்தன.




ஆமையும் நத்தையும் போயின. குளத்திலிருந்து தாவி வந்தது தவளை



தவளை மீண்டும் குளத்தில் குதித்தது. குளத்திலிருந்து எட்டிப் பார்த்தது மீன்.




நீருக்குள் மூழ்கியது மீன். அப்போது அவ்வழியாக ஒரு அணில் வந்தது.






## செயல்பாடுகள்

❖ நிலனும் வளனும் கீழ்க்காணும் உயிரினங்களைச் சந்தித்தால் என்ன கேட்டிருப்பார்கள்? உரையாடலை எழுதுங்கள்.







❖ உயிரினங்களை வகைப்படுத்துங்கள்.

| கூடுகட்டி வாழ்பவை | மரப்பொந்துகளில் வாழ்பவை | மண்புற்றுகளில் வாழ்பவை |
|---|---|---|
| ◈ | ◈ | ◈ |
| ◈ | ◈ | ◈ |
| ◈ | ◈ | ◈ |
| ◈ | ◈ | ◈ |
| ◈ | ◈ | ◈ |
| ◈ | ◈ | ◈ |

# எங்கள் வீட்டுப் பிள்ளைகள்

*நிலனும் வளனும் வீட்டை அடைந்தனர். மறுநாள் காலையில் நிலன் வீட்டு முற்றத்தில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தான். அப்போது வீட்டின் முன் உள்ள சாலை வழியாக யானை ஒன்று சென்றது. யானைப்பாகன் யானையின் மீது அமர்ந்திருந்தான். குழந்தைகளும் பெரியவர்களும் யானைக்குப் பின்னால் கூட்டமாகச் சென்றனர். நிலன் உடனே அப்பாவை அழைத்தான்.*



# யானை வருது யானை!

அப்பா ஓடி வாருங்கள்
அதிசயத்தைப் பாருங்கள்!
ஆனை வந்தது தெருவிலே
அதிகக் கூட்டம் அருகிலே



தூரத்தள்ளி நில்லுங்கள்
தும்பிக்கையைப் பாருங்கள்
சேர நாட்டு யானையோ!
சிங்கம் கூட அஞ்சுமோ?

பெரிய கால்கள் காதுகள்
பெரிய வயிறு தந்தங்கள்
அருகில் போகக் கூடாது
அப்பா! சொன்னால் கேளுங்கள்

பென்னம் பெரிய யானைக்குச்
சின்னஞ் சிறிய கண்களா!
தின்னப் பழங்கள் தருகிறார்
யானைப் பாகன் பாருங்கள்!



## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்
- உனக்குப் பிடித்த பாடல் வரிகள் எவை? ஏன்? எழுதுங்கள்?

**எனக்குப் பிடித்த வரிகள்**

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

காரணம் : ..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

- யானையைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுங்கள்

**யானை**

தரையில் வாழும் விலங்குகளில் மிகப்பெரியது யானை.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

வளனுடைய வீட்டில் ஒரு பூனையைச் செல்லப் பிராணியாக வளர்த்து வந்தார்கள். அந்தப் பூனை மரத்தின் மீது ஏறுவதும் குதிப்பதுமாக இருந்தது. பூனை ஏன் இவ்வாறு செய்கிறது? வளனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் அம்மாவிடம் சென்று கேட்டான். அம்மா பதில் கூறத் தொடங்கினாள்.



## பறக்கும் பூனை

அந்தப் பூனைக்குட்டி வானத்தில் பறக்க ஆசைப்பட்டது. ஒரு பறவையின் இறகு கிடைத்தது. தேடி அலைந்து மேலும் பல வகையான இறகுகளைச் சேர்த்துக் கொண்டது. அவற்றைச் சிறகாக்கித் தன் முதுகில் கட்டிக்கொண்டு பறக்க முயன்றது. ஆனால் முடியவில்லை.

நினைத்தது நடக்காததால் பூனைக்குட்டி கவலைப்பட்டது. அப்போது அங்கே ஒரு காகம் வந்தது. பூனைக்குட்டியின் முதுகில் இருந்த இறகுகளைக் கண்டது. " என்ன செய்கிறாய்?" எனக் கேட்டது.







"பறக்க முடியுமான்னு பார்த்தேன்" என்றது பூனைக்குட்டி. காகம் சிரித்துக் கொண்டே "வேறு ஒரு பறவையின் இறக்கையைக் கட்டிக் கொண்டு பறக்க முடியாது. உனக்கு இறக்கை இருந்தால் பறக்கலாம்" என்றது.

இப்போது தான் பூனைக்குட்டி தன் தவறை உணர்ந்தது.

"மரம் ஏறி அதில் இருந்து குதித்தால் பறப்பதை நீ உணரலாம்" என்று காகம் சொன்னது.

அன்று முதல் பூனைக்குட்டி மரத்தில் ஏறி இறங்கிப் பயிற்சி செய்தது.

சில நாட்கள் கழித்து மரத்தில் இருந்து கீழே குதிக்கவும், அடிபடாமல் விழுந்து எழுந்து ஓடவும் கற்றுக்கொண்டது. அப்படிக் குதிக்கும் அந்தத் தருணத்தை வானத்தில் பறப்பதுப் போன்று இரசித்தது பூனைக்குட்டி.



## செயல்பாடுகள்

❖ பூனைக்குட்டியின் ஆசை என்னவாக இருந்தது?

❖ வேறு ஒரு பறவையின் இறக்கையைக் கட்டிக் கொண்டு பறக்க முடியாது என்று கூறியது எது?

❖ பூனைக்குட்டியின் ஆசை நிறைவேறியதா? எவ்வாறு?

❖ கூறுங்கள்.

- உங்கள் வீட்டில் ஏதேனும் செல்லப் பிராணி வளர்க்கிறீர்களா?
- வளர்ப்பு உயிரினங்களிடம் பழகும்போது என்னென்ன கவனிக்க வேண்டும்?

❖ மாதிரியைப் போன்று எழுதுங்கள்.

- பூனை ஓடியது.
  பூனைகள் ஓடின.
- காகம் கரைந்தது.
  ..................................................................
- ..................................................................
  நாய்கள் குரைத்தன.
- எறும்பு ஊர்ந்து சென்றது.
  ..................................................................

## பேசும் மீன்கள்

*நிலனின் அப்பா வண்ண மீன்கள் உள்ள ஒரு மீன் தொட்டியை வீட்டிற்கு வாங்கி வந்தார். நிலன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். மீன்கள் நீந்தும் அழகை இரசித்தான். அவனது அக்காவை அழைத்தான்.*



## நிலனின் மீன் தொட்டி

தொட்டிக்குள்ளே பெரிய மீன்கள்
வளைய வருகுது

சுற்றிச் சுற்றி சின்ன மீன்கள்
வட்டம் அடிக்குது

வாலை அசைத்து நெளியும் போது
அழகாய் இருக்குது

வளைந்த உடம்பில் பொட்டுப் பொட்டாய்
வைரம் மின்னுது

கத்தி போல நீரைச் சீவி
நீச்சல் அடிக்குது

காலில்லாமல் அந்தரத்தில்
எப்படி நிக்குது?



## செயல்பாடுகள்

- ❖ பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்
- ❖ தொட்டிக்குள் மீன்கள் எவ்வாறெல்லாம் காணப்படுகின்றன?
  - ◈ வாலை அசைத்து நெளிந்து செல்கின்றன.
  - ◈
  - ◈
  - ◈
  - ◈
- ❖ மீனின் படம் வரைந்து வண்ணம் தீட்டுங்கள்/ பென்சில் சீவிய துகள்களைக்கொண்டு அழகுபடுத்துங்கள்.

நீந்திச் செல்லும் மீன்களைப் பார்த்தபின் நிலனுக்கும் வளனுக்கும் நீச்சல் பழக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. நண்பர்கள் இருவரும் ஆற்றை நோக்கிச் சென்றனர்.



## வானவில் மீன்

நிலனும் வளனும் ஆற்றங்கரையில் ஒரு பாறை மீது அமர்ந்து கால்களை நீருக்குள் விட்டிருந்தனர். அவர்களது கால்களை யாரோ சுரண்டுவது போல இருந்தது. அது ஒரு மீன்.

கால்களின் அருகே வந்த வானவில் நிற மீனிடம் "உன்னைப் போல நீந்த வேண்டும். நீ எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறாய்!" என்றான் நிலன்.

"நாங்கள் எப்பொழுதும் இயற்கையாக வாழும் இடம் நீர். இங்கு மகிழ்ச்சியாக இருக்கிறோம். மனிதர்கள்தான் வலையைப் போட்டு எங்களைப் பிடித்து எங்களின் மகிழ்ச்சியைக் கலைக்கிறார்கள்" என்றது வானவில் மீன்.

"மனிதர்கள் எங்களை அலங்காரமாகக் கண்ணாடித் தொட்டிகளில் அடைத்து வைப்பது உங்களுக்குத் தெரியுமா?" என்றது வானவில் மீன்.



"என் வீட்டிலும் கூட அழகான மீன் தொட்டியை வைத்துள்ளேன்" என்றான் வளன். பெருமூச்சு விட்டது வானவில் மீன்.

"இயற்கையான உணவும் இல்லை; உடன் நண்பர்களும் இல்லை. ஓடி ஆட இடமும் இல்லை. யாருக்குத்தான் கண்ணாடித் தொட்டிக்குள் வாழப் பிடிக்கும்?" வானவில் மீன் வருத்தத்துடன் கூறியது.

அதைக் கேட்ட நிலனும் வளனும் ஆச்சரியப்பட்டனர். இந்த உலகம் எல்லா உயிர்களுக்கும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு உரியதுதான் என்ற எண்ணம் அவர்களுக்குள் எழுந்தது.

நிலன் வானவில் மீனை நோக்கி, "இனி நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டாம். உடனே வீட்டிற்குச் சென்று கண்ணாடித்தொட்டிக்குள் வாழும் மீன்களை நீர்நிலைகளில் விட்டுவிடுகிறேன்" என்றான். நானும் அவ்வாறே செய்வேன் என்றான் வளன். நலன், வளன் பேச்சைக்கேட்டு மகிழ்ச்சி அடைந்தது வானவில் மீன். அது அவர்களுக்கு நன்றி கூறியது. மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்து ஆற்றில் நீந்தியது வானவில் மீன்.



## செயல்பாடுகள்

- உரையாடுங்கள்
  - உங்கள் வீட்டில் அலங்கார மீன் தொட்டிகள் உள்ளனவா?
  - எதற்காக மீன்களை வளர்க்கிறீர்கள்?
- கதையை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- கதைப் பகுதியை வாசித்து விடை எழுதுங்கள்.
  - நிலனும் வளனும் ஏன் ஆற்றை நோக்கிச் சென்றார்கள்?
  - மீன்கள் ஏன் வருத்தப்பட்டன?
  - வருத்தப்பட்ட மீன்களிடம் நிலன் என்ன கூறினான்?
- படம் வரையுங்கள்.

  ஒரு கண்ணாடித் தொட்டிக்குள் பல வண்ணங்களில் மீன்கள் இருப்பது போல் படம் வரையுங்கள்.

- மீன்கள் பற்றி ஒரு சிறுகுறிப்பு எழுதுங்கள்.

**மீன்கள்**

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

அலகு 4

# உடலும் உள்ளமும்

## உணவே மருந்து

*அன்று பள்ளிக்கூட விடுமுறை நாள். பள்ளிக்கூட வளாகத்தில் உடல் நலம் தொடர்பான கண்காட்சி நடைபெற்றது. குழந்தைகள் பெற்றோருடன் பங்கு பெற்றனர். அகிலாவும் தன் அப்பாவுடன் கண்காட்சியைப் பார்க்கச் சென்றாள். முதலில் உணவுப் பண்டங்களின் காட்சிகளைப் பார்வையிட்டனர். அந்த அறையில் பாடல் ஒன்று ஒலித்துக் கொண்டிருந்தது. அதனைக் கேட்டவாறு காட்சிகளைப் பார்த்து இரசித்தனர்.*



## நோயின்றி வாழ!

காலை உணவைத் தவிர்க்காதே
காப்பி தேநீர் அருந்தாதே
பாலை மட்டும் அருந்திய பின்
பலகா ரத்தை உண்டிடுக!

மதிய உணவில் காய்கறிகள்
கீரை வகைகள் சேர்த்திடுவாய்
அதிக புரதம் கொண்டிருக்கும்
மாமிச வகைகளைத் தவிர்க்காதே!

மாலை நேரம் விளையாடி
மல்லாக் கொட்டை கடலையென
வேலை செய்யப் பலமளிக்கும்
விதைகள், பருப்பை உண்டிடுக!





எளிதில் செரிக்கும் உணவினையே
என்றும் இரவில் உண்டிடுக
புளியை, உப்பைக் காரத்தைப்
பொதுவாய்க் குறைத்தே உண்டிடுக

மட்ட துரித உணவினிலே
மயங்கா தென்றும் இருந்திடுக
திட்ட மிட்டே உண்டிடுக
தேக வலிமை போற்றிடுக!

வாயின் சுவைக்காய்க் கண்டதையும்
வாரி வாரி உண்ணாமல்
நோயில் நொடியில் வீழாமல்
நீண்ட காலம் வாழ்ந்திடுக!

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- நோயின்றி வாழ என்னென்ன செய்ய வேண்டும் என்று கவிஞர் கூறியுள்ளார்?
- பாடலில் உனக்குப் பிடித்த பகுதி எது? ஏன்? எழுதுங்கள்.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

- பாடலில் நோயின்றி வாழ எவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று கூறியுள்ளார்?
  - 
  - 
- உணவில் எவற்றையெல்லாம் சேர்த்தால் ஆரோக்கியமாக வாழ முடியும் ? எழுதுங்கள்.
  - 
  - 
  - 
  - 
  - 

அகிலாவும் அப்பாவும் அடுத்த அறைக்குள் சென்றனர். அங்குச் சுத்தமான உணவுகளைக் குறித்த சில விளக்கப் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றை அகிலா வாசித்தாள்.



## உணவும் உயிரும்

நம் உடல் வளர்ச்சி அடைவதற்கானக் காரணங்கள் எவை? நாம் உண்ணும் உணவு சத்தானதாக இருக்க வேண்டும். சுத்தமாகத் தயாரிக்கப்படவும் வேண்டும். நாம் உண்ணும் உணவில் புரதம், கொழுப்பு, வைட்டமின்கள், தாது உப்புகள் போன்ற பல்வேறு ஊட்டச்சத்துகள் சரியான அளவில் இருக்க வேண்டும்.

சுத்தமான சத்தான உணவு நம் உடலுக்கு ஆற்றலை வழங்குகிறது; உடல் வளர உதவுகின்றது. அது போல நோய், காயம் ஆகியவற்றால் பழுதுபட்ட உடலுறுப்புகளைப் புதுப்பிக்கவும் உணவு உதவுகின்றது. எனவே சுத்தமான, சத்தான உணவு மிகவும் முக்கியமானது. உணவு இல்லாமல் நாம் உயிர் வாழ முடியாது.

கெட்டுப் போன உணவை உட்கொள்ளக் கூடாது. கெட்டுப் போன உணவை உட்கொள்ளுவதன் மூலம் ஒருவருடைய உடல்நிலை பாதிக்கப்படுகிறது. எனவே உணவைக் கெட்டுப் போகாமல் பாதுகாப்பாக வைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.



## செயல்பாடுகள்

❖ குறிப்பைப் படித்து அதனடிப்படையில் கீழ்க்காணும் கூற்று சரியா (✓) தவறா (✗) என்று அடையாளப்படுத்துங்கள்.

- கெட்டுப்போன உணவை நாம் உட்கொள்ளக் கூடாது. ☐
- நாம் உண்ணும் உணவில் ஊட்டச் சத்துகள் சரியான அளவில் இருக்க வேண்டும். ☐
- உணவு இல்லாமல் நாம் உயிர் வாழ முடியும். ☐
- உணவு தயாரிக்குமிடம் சுத்தமாக இருக்க வேண்டும். ☐
- துரித உணவுகள் ஆரோக்கியத்திற்கு நல்லது. ☐
- அளவிற்கு அதிகமாக உண்பதால் ஆரோக்கியம் அதிகரிக்கும். ☐
- கீரைகள், பருப்பு போன்றவற்றை உணவில் அன்றாடம் சேர்ப்பது நல்லது. ☐
- சத்தான உணவு நம் உடலுக்கு ஆற்றலை வழங்குகிறது. ☐

❖ எழுதுங்கள்.

எனக்குப் பிடித்த உணவு

..........................................................................

காரணம்

அடுத்ததாகப் பலவகையான கீரைகள் வைக்கப் பட்டிருந்த அறைக்குள் சென்றனர். கண்காட்சியில் அரைக்கீரை, முளைக்கீரை, சிறுகீரை, தண்டங்கீரை, முருங்கைக் கீரை, அகத்திக் கீரை, பசலைக்கீரை என ஏராளமான கீரைகள் காணப்பட்டன. அவை ஒவ்வொன்றும் தங்களது பெருமைகளைப் பேசின. அவை பேசுவதைக் கேட்டு அகிலாவும் அப்பாவும் ஆச்சரியப்பட்டனர்.



## யார் பெரியவர்?

(அரைக்கீரை பிற கீரைகளை நோக்கிக் கேட்டது)

அரைக்கீரை : நண்பர்களே! எனக்குத்தான் கீரைகளின் அரசன் என்று பெயர். எனவே உங்கள் எல்லோரையும் விட நானே பெரியவன்.

அகத்திக்கீரை : நண்பர்களே! என்னுடைய அருமையினை நீங்கள் புரியாமல் இருக்கின்றீர்கள்! அதனால் என் மனம் வேதனையடைகிறது.

அரைக்கீரை : எதற்காக வேதனைப்படுகிறாய்?

அகத்திக்கீரை : ஆம், என்னிடம் ஏராளமான மருத்துவ குணங்கள் இருக்கின்றன. அதனை நீங்கள் உணர்ந்து கொள்ளாமல் இருக்கின்றீர்கள். எனவே உங்கள் எல்லோரையும் விட நானே பெரியவன் என்பதை மறந்துவிட்டீர்கள்!

முருங்கைக்கீரை : நண்பர்களே! நீங்கள் கூறுவது முற்றிலும் தவறானது. உங்கள் செயல் எனக்கு மிகுந்த வேதனையளிக்கிறது.

அகத்திக்கீரை : ஏன் அப்படிக் கூறுகின்றாய்?

முருங்கைக்கீரை : எப்படிப்பட்ட நோயாக இருந்தாலும் நான் அதனை எளிதில் குணப்படுத்தி விடுவேன்.

அரைக்கீரை : எப்படி உன்னால் குணப்படுத்த இயலும்?







முருங்கைக்கீரை : ஆம்! என் காய், இலை, பூ, பட்டை எல்லாமே மருந்தாகப் பயன்படுகின்றன. எனவே நானே உங்களை விடப் பெரியவன்.

(அகிலாவின் அப்பா கீரைகளின் உரையாடலையும், அகிலாவையும் கவனித்தார்.)

அகிலா : அப்பா! இந்தக் கீரைகள் பேசுவதைக் கவனித்தீர்களா?

அப்பா : ஆமாம் நானும் கேட்டேன். யார் பெரியவர் என்ற போட்டியல்லவா நடக்கிறது.

அகிலா : உண்மைதான் அப்பா.

அப்பா : கீரைகளே ! உங்களுக்குள் போட்டி எதற்கு? நீங்கள் எல்லோருமே மனிதர்களுக்கு உணவாகப் பயன்படுகிறீர்கள்! அதில் என்ன பெரியவர் சிறியவர் வேறுபாடு?

முருங்கைக்கீரை : ஆமாம் நீங்கள் கூறுவது சரிதான்.

அப்பா : தன் வாழ்க்கையைப் பிறருக்குப் பயன்படும் படியாக யார் அமைத்துக் கொள்கிறார்களோ அவர்களே பெரியவர்கள்.

அகத்திக்கீரை : சரியாகக் கூறினீர்கள். எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.



## செயல்பாடுகள்

- உரையாடலை நடித்துக் காட்டுங்கள்.
- 'கீரைகளின் அரசன்' எது?
- வாசித்த பகுதியில் எத்தனை கீரை வகைகள் வந்துள்ளன?

| | | |
|---|---|---|
| | | |
| | | |

- காய், இலை, பூ போன்றவை உணவாகப் பயன்படும் தாவரம் எது?

| |
|---|
| |

- அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய எதிர்ச்சொல்லை எழுதுங்கள்.

மாதிரி : நான் உன்னை விடப் பெரியவன்
நான் உன்னை விடச் சிறியவன்

- நீங்கள் சொல்வது உண்மை தான்

........................................................................................

- நீங்கள் கூறுவது முற்றிலும் தவறு

........................................................................................

- நீங்கள் கூறுவது மகிழ்ச்சியாக இருக்கிறது.

........................................................................................

## ஆள் பாதி ஆடை பாதி

*கீரை வகைகளைப் பார்வையிட்ட பின்பு அகிலாவும் அவளது அப்பாவும் ஆடைகள் கண்காட்சி அரங்கிற்குள் நுழைந்தனர். அங்குப் பல வகையான ஆடைகளைத் தொங்க விட்டிருந்தனர். அவை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பொருந்தக் கூடியவை. அந்த ஆடைகள் காற்றில் அசைந்த வண்ணம் இருந்தன. எங்கிருந்தோ ஒரு இனிமையான பாடல் கேட்டது. அவர்கள் இருவரும் பாடல் வந்த திசையைப் பார்த்தனர். அங்குக் காற்றில் அசைந்தவாறு ஒரு சட்டை பாடிக்கொண்டிருந்தது.*



# ஆடையும் அழகும்

அணியும் ஆடை தன்னிலே
அழகு வேண்டும் பிள்ளையே!
துணியும் தூய தாகவே
துவைத்து உடுத்தல் நல்லதே!

ஆற்றல் கோடி இருக்கலாம்
அறிவில் சிறந்து விளங்கலாம்
போற்றும் வண்ணம் ஆடைகள்
புனைய வேண்டும் பிள்ளையே!

குறைந்த விலையில் கடையிலே
குவிந்து கிடக்கும் துணிகளை
அலைந்து திரிந்து தேடித்தான்
ஆடை அணிய வேண்டும் நாம்!

தோற்றம் மிகவும் முக்கியம்
துணிவு அதனில் முக்கியம்
ஏற்றம் மிக்க அறிவினால்
எதுவும் வெல்லல் நிச்சயம்!



## செயல்பாடுகள்

❖ பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்

❖ பாடலில் உனக்குப் பிடித்த பகுதி எது? ஏன்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

❖ ஆடைகளை எவ்வாறெல்லாம் அணிய வேண்டும் என்று கவிஞர் கூறியுள்ளார்? எழுதுங்கள்.

அகிலாவுக்கு அவளது அப்பா சில புதிய ஆடைகளை வாங்கிக் கொடுத்தார். அகிலா மகிழ்ச்சியடைந்தாள். அவள் தனது அண்ணனுக்கும் துணிகள் வாங்க வேண்டும் என அப்பாவிடம் கூறினாள். இருவரும் ஆண்களுக்கான ஆடைகள் வைக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றனர். அங்கு ஓர் அம்மா தனது மகனுக்குப் புதிய ஆடையைக் குறித்த ஒரு கதையைக் கூறிகொண்டிருந்தார்.



## புத்தாடை

பாலத்தூர் என்ற ஊரில் அழகேசன் என்றொரு பணக்காரன் இருந்தான். அவன் மகாக் கஞ்சன். சரியாகக் கூடச் சாப்பிடாமல் வயிற்றுக்கே வஞ்சகம் செய்வான். நல்ல துணிகளையும் உடுத்தமாட்டான். ஒரு பைசாவைச் செலவு செய்ய வேண்டியிருந்தாலும் பத்துத் தடவை யோசனை செய்வான். அவனுடைய மனைவி, கணவனின் கஞ்சத்தனத்தைக் கண்டு கவலைப்பட்டவாறு இருந்தாள்.

ஒரு தீபாவளியின்போது அழகேசன் புத்தாடைகளை உடுத்திக் கொள்ளாமல் பழைய உடைகளையே உடுத்திக் கொண்டான். அதைக் கண்ட அவன் மனைவி "இன்றைக்குக் கூடவா பழைய துணிகளை உடுத்துவது? புத்தாடைகளை அணிந்தால் ஊரார் உங்களைப் பற்றி நல்ல விதமாகப் பேசுவார்களே !" என்றாள். அதற்கு அவன் " இந்த ஊரில் யாருக்குத் தான் என்னைத் தெரியாது? நான் புதிய உடைகளை அணிந்து கொண்டாலும், அணியாவிட்டாலும் என்னை யாரென்று தெரிந்து கொள்வார்களல்லவா?" என்றான்.

ஒரு நாள் அழகேசன் வேலையாக வேறொரு ஊருக்குப் புறப்பட்டான். அப்போது அழுக்குப் பிடித்த உடைகளையே அணிந்து கொண்டான். அதைப் பார்த்த அவன் மனைவி, " வெளியூருக்குப் போகும் போதாவது புதிய ஆடைகளை அணிந்து செல்லக் கூடாதா?" என்று கேட்டாள். அதற்கு கஞ்சனான அழகேசன். "அந்த ஊரில் யாருக்கு என்னைத் தெரியும்? அதனால் எந்த உடை உடுத்திக் கொண்டு போனாலும் ஒன்று தான்." சிரித்துக் கொண்டே புதிய உடை எதற்கு?" என்றான்.



## செயல்பாடுகள்

- கதையை வாசித்துச் சுவைபடக் கூறுங்கள்
- அழகேசன் கூறியது சரியா? தவறா? உங்கள் கருத்து என்ன?
- நாம் ஆடைகள் அணியும்போது எவற்றையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும்?
- பிரித்து எழுதுங்கள்.
  - புத்தாடை = புதிய + ஆடை
  - புத்தாண்டு =
  - புத்துயிர் =
- அழகேசனும் மனைவியும் பேசுவதை உரையாடலாக மாற்றி எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| அழகேசனின் மனைவி | : | ஏங்க.. இன்று தீபாவளி |
| அழகேசன் | : | ம் ..... அதுக்கு என்ன? |
| மனைவி | : | இன்றைக்குக் கூடவா பழைய துணிகளை அணிவது? |
| .................................... | : | .................................................................................... |
| .................................... | : | .................................................................................... |
| .................................... | : | .................................................................................... |
| .................................... | : | .................................................................................... |

## வாழ்வும் விளையாட்டும்

*இருவரும் கண்காட்சியைப் பார்த்த பின்பு மைதானத்தில் ஒரு மரத்தின் அடியில் சிறிது நேரம் ஓய்வெடுத்தனர். பள்ளிப் பூங்காவில் சிறு பிள்ளைகள் பாடல்கள் பாடியவாறு விளையாடிக் கொண்டிருந்தனர். அகிலாவும் அவர்களுடன் சேர்ந்து விளையாட ஆசைப்பட்டாள். அப்பா சரி என்றார். அகிலாவும் பாடல் பாடியவாறு விளையாடத் தொடங்கினாள்.*



# துள்ளி விளையாடு

துள்ளித் துள்ளி விளையாடு
பள்ளி விட்டதும் விளையாடு
கூடிச் சேர்ந்து விளையாடு
குழுவாய் இணைந்து விளையாடு!

ஓடித் துரத்தி விளையாடு
ஒளிந்து பிடித்து விளையாடு
பாடிச் சிரித்து விளையாடு
பல்லாங் குழியும் விளையாடு!

உப்பு மூட்டை விளையாடு
ஊஞ்சல் ஆடி விளையாடு
கல்லா மண்ணா விளையாடு
கண்ணாமூச்சி விளையாடு!



கபடி கபடி விளையாடு
கரகர வண்டி விளையாடு
பச்சைக் குதிரை விளையாடு
பாண்டி ஆட்டம் விளையாடு!

வண்ணம் கேட்டு விளையாடு
வளையப் பந்து விளையாடு
கிச்சு சிச்சுத் தாம்பாளம் விளையாடு
கிட்டிப் புள்ளும் விளையாடு!

பந்து எறிந்து விளையாடு
பட்டம் விட்டு விளையாடு
பம்பரம் சுற்றி விளையாடு
பளிங்கு உருட்டி விளையாடு!



## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.

- பாடலில் என்னென்ன விளையாட்டுகளின் பெயர்கள் வந்துள்ளன? எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

- பாடலில் உங்களுக்குப் பிடித்த பகுதி எது? ஏன்?

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

- நீங்கள் என்னென்ன விளையாட்டுகள் விளையாடுவீர்கள்? எழுதுங்கள்.

  - 
  - 
  - 
  - 
  - 

- விளையாடுவதால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன? கூறுங்கள்.

விளையாடி முடிந்த பின்பு அகிலா அப்பாவுடன் வீட்டிற்குப் புறப்பட்டாள். செல்லும் வழியில் கண்காட்சியில் பார்த்த காட்சிகளைக் குறித்துப் பேசிக்கொண்டே சென்றனர். சத்தான உணவும் சுத்தமான ஆடைகளும் உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியமானவை என அப்பா கூறினார். மேலும் சில அறிவுரைகளையும் அவர் வழங்கினார்.





# முதன்மையான சொத்து

'செல்வத்தை விடச் சிறந்தது உடல் நலம்.'

ஒவ்வொருவரும் தங்களின் உடல்நலத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். உண்ணுதல், உழைத்தல், நடைப்பயிற்சி, உடற்பயிற்சி செய்தல், உறங்குதல் போன்றவற்றை அளவோடும் சீராகவும் அவரவர் உடல் நிலைக்கு ஏற்றவாறும் அமைத்துக் கொள்ள வேண்டும். நம் உடலையும் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். சுத்தமான நீர், காற்று, சுகாதாரமான சூழ்நிலை உடல் நலத்திற்கு மிகவும் தேவை.

உடல் நலமாக இருந்தால் தான் உள்ளமும் நலமாக இருக்கும். உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். உடல் நலத்திற்கு உடற்பயிற்சியும் மன நலத்திற்கு மனப்பயிற்சியும் செய்ய வேண்டும். எப்போதும் உற்சாகத்தோடு இருக்க பழகிக் கொள்ள வேண்டும். நாம் உடலை நலமாக வைத்துக் கொள்வதற்கு முக்கிய கவனம் செலுத்த வேண்டும். உடல் நலமே வாழ்வு நலம் பெற உதவும்.

## செயல்பாடுகள்

❖ செல்வத்தை விடச் சிறந்தது எது?

❖ உடல் நலத்தைப் பாதுகாக்க என்னென்ன செய்ய வேண்டும்? எழுதுங்கள்.

- ...............................................................................................
- ...............................................................................................
- ...............................................................................................
- ...............................................................................................
- ...............................................................................................
- ...............................................................................................
- ...............................................................................................
- ...............................................................................................
- ...............................................................................................
- ...............................................................................................

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

KERALA STATE COMMISSION FOR PROTECTION OF CHILD RIGHTS

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***